சுயம்புலிங்கம் மேல் நிலைப் பள்ளி

இயக்க விதிகள்

1. கீழ்கண்டவற்றில் நிலைமம் எதனைச் சார்ந்தது?

அ) பொருளின் எடை ஆ) கோளின் ஈர்ப்பு முடுக்கம் இ) பொருளின் நிறை ஈ) அ மற்றும் ஆ

2. கணத்தாக்கு கீழ்கண்டவற்றுள் எதற்குச் சமமானது?

அ) உந்த மாற்று வீதம் ஆ) விசை மற்றும் கால மாற்று வீதம் இ) உந்த மாற்றம்
ஈ) நிறை வீத மாற்றம்

3. கீழ்கண்டவற்றில் நியூட்டனின் 3ஆம் விதி எங்கு பயன்படுகிறது?

அ) ஓய்வு நிலையிலுள்ள பொருளில் ஆ) இயக்க நிலையிலுள்ள பொருளில் இ) ஆ மற்றும் ஆ ஈ) சம நிறையில் உள்ள பொருட்களில் மட்டும்

4. உந்த மதிப்பை Y அச்சிலும் காலத்தினை X அச்சிலும் கொண்டு ஒரு வரைபடம் வரையப்படுகிறது. இவ்வரைபட சாய்வின் மதிப்பு

அ) கணத்தாக்குவிசை ஆ) முடுக்கம் இ) விசை ஈ) விசை மாற்று வீதம்

5. விசையின் சுழற்சி விளைவு கீழ்காணும் எந்த விளையாட்டில் பயன்படுகிறது?

அ) நீச்சல் போட்டி ஆ) டென்னிஸ்

இ) சைக்கிள் பந்தயம் ஈ) ஹாக்கி

6. புவிஈர்ப்பு முடுக்கம் g-ன் அலகு ms^{-2} ஆகும். இது கீழ்காணும் அலகுகளில் எதற்கு சமமாகும்?

அ) $cm\ s^{-1}$ ஆ) $N\ kg^{-1}$ இ) $N\ m^2\ kg^{-1}$ ஈ) $cm^2\ s^{-2}$

7. ஒரு கிலோகிராம் எடை என்பது _____ க்குச் சமமானது.

அ)9.8 டைன் ஆ)9.8×10^4N இ)98×10^4டைன் ஈ)980டைன்

8. புவியில் M நிறை கொண்ட பொருள் ஒன்று புவியின் ஆரத்தில் பாதியளவு ஆரம் கொண்ட கோள் ஒன்றிற்கு எடுத்துச் செல்லப்படுகிறது அங்கு அதன் நிறை மதிப்பு

அ) 4M ஆ) 2M இ) M/4 ஈ) M

9. நிறை மதிப்பு மாறாமல் புவியானது தனது ஆரத்தில் 50% சுருங்கினால் புவியின் பொருட்களின் எடையானது?

அ)50% குறையும் ஆ) 50% அதிகரிக்கும் இ)25%குறையும் ஈ)300% அதிகரிக்கும்

10. ராக்கெட் ஏவுதலில் _____ விதிகள் பயன்படுத்தப்படுகிறது.

அ) நியூட்டனின் 3ஆம் விதி ஆ) நியூட்டனின் பொது ஈர்ப்பியல் விதி இ) நேர்கோட்டு உந்த மாறா கோட்பாடு ஈ) அ மற்றும் இ